கற்பகவேதுணை

# அரசிளங்குமரி



எங்கோ ஒரு ராஜ்ஜியத்தில் அந்த நாட்டு அரசிளங்குமரி அரண்மனையிலிருந்து வெளியே சென்று விடுகிறாள். சிலநாட்கள் சென்றதும் தன் இடத்தை வேறு ஒருத்தி நான் தான் இளவரசி என்று திருட்டுத்தனமாக அரண்மனைக்குள் நுழைந்து விடுகிறாள். அரசரும் அவள் ஆடை அணிகளில் மயங்கி ஏற்றுக் கொண்டு விடுகிறார் கேள்வி? வெளியே வந்தவள் அரண்மனை திரும்புவாளா? அல்லது தியாகம் செய்து விடுவாளா

நாட்கள் சென்றன. வெளியே வந்தவள் என்ன செய்வது? எங்கே போவது? என தெரியாமல் மனம் போனபடி நடந்து ஒரு மரத்தடியால் சற்று இளைப்பாறினாள். சற்று தொலைவில் சிறு கூட்டம் ஏதோ சண்டை சச்சரவு மாதிரி தோன்றியது அருகில் சென்றதில் ஒரு தாய் தன் மகனை கை ஓங்கியபடி அடித்துக் கொண்டிருப்பது தெரிந்தது. கூட்டத்தில் ஒருவன் "இரும்மா அவனை நீ எப்படி கை நீட்டி அடிக்கலாம்? அடிப்பேன் என் மகன் எனக்கு உரிமை உண்டு. குடும்பம் நன்றாக இருக்க இதை செய்யத்தான் வேண்டும். அதே சமயம் குடும்பதலைவிக்கு குடும்பத்தின் பெயரை காப்பாற்ற உரிமை உண்டு. குடும்பம் காப்பாற்றபட்டால் தான் இந்த நாடு நன்றாக இருக்கும். ஊர்மக்கள் அமைதியாக வாழ்க்கை நடத்துவார்கள். இந்த உண்மை சட்டென்று அவள் நெஞ்சை தொட்டது!

நாடு நன்றாக இருக்க நாட்டின் அரசன்
என் தந்தையார் அதைத்தான் செய்திருக்கிறார்
ஏமாந்தீர்கள் என நினைத்தேன். நல்ல காரியம்
தான் செய்து இருக்கிறீர்கள்.

கூட்டத்தில் ஒருவன் என் பெயரை சொல்லி
அழைத்தான். என் பெயர் ஆதிரை மங்கை. மனம்
திக்கென்றது. இங்கே யார் என்னைத் தெரிந்த
வர். திரும்பி பார்த்தேன் வாலிபன் ஒருவன் ஒரு
ராஜகுமாரனைப்போல் தோற்றம். நீங்கள் தானே
புதுக்கோட்டை தொண்டைமான் மகள். மெதுவாக
பேசுங்கள். வாருங்கள்! என்னைப்பற்றி
எல்லாம் தெரிந்திருக்கிறது. தங்களைப் பற்றி!---
ஓ நான் இந்த கோவூர் அரசனின் குமாரன். பெயர்
சித்திரசேனன். தந்தையார் தங்கள் அரண்மனைக்கு
கப்பம் கட்ட வரும் பொழுது நானும் உடன் வருவேன்
அச்சமயம் தங்களை இரண்டொரு முறை
பார்த்திருக்கிறேன். நீங்கள் தனியாகவா?
உடன் யாரும் இல்லையே! தனியாகத்தான்
வந்துள்ளேன். இங்கே சற்று அமர்ந்து பேசலாமா?
எதற்கு? அரண்மனை அருகில்தான். வாருங்கள்
எல்லா விபரங்களையும் சித்திரசேனனுக்கு
விளக்கி சொன்னாள். என்ன ஆனது உங்களுக்கு
வாழ்க்கையே கசந்து போனதா? விடுங்கள்
ஏதோ ஒரு அவசர முடிவு. இப்போதைய பிரச்சினை
நான் அரசகுமாரியாக அரண்மனை செல்ல
வேண்டும்.

வந்திருப்பவள் சாதாரண மாணவன் அல்லை.
அவசத்தில் என் கிடத்தை பிடித்து அதை
தூக்கவும் செய்துவிட்டாள்

ராஜகுமாரி! ஆதிரை என்றே அழையுங்கள்
பக்கத்தில் உள்ள பல நாடுகளுக்கு சாதாரண
குடிமகன் போல் சென்று வருபவன். உங்களை
அப்படித்தான் அந்தக் கூட்டத்தில் கண்டேன்
கவலையே படாதீர்கள். நமது திட்டம் உடனேயே
தொடங்குகிறது. தங்குவதற்கான ஏற்பாடுகள்
எல்லாம் செய்து விட்டேன். இரவு உணவு
அருந்திவிட்டு கவலையின்றி உறங்குங்கள்.
அதிகாலையில் புறப்படுகிறோம். குதிரைகள்
காத்திருக்கின்றன. குதிரை ஏற்றம் தெரியும்
அல்லவா! கிண்டலா! கேளுங்கள் என் தந்தைக்கு
நான் ஒருவனே வாரிசு. ஒரு ஆண் மகனுக்கு
தெரிந்து கொள்ள வேண்டியவைகள் அனைத்
தையும் கற்று தேர்ச்சி பெற்றுள்ளோம்.
தெரிந்ததா? மகாராணி ஏதோ விளையாட்டாக
சொன்னதை -- நானும் விளையாட்டாகத்தான்
சொன்னேன். ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்
காலையில் சந்திப்போம்.

இருவரும் பக்கத்து சமஸ்தானம்
வந்தடைந்தார்கள். குதிரைகளை கட்டிவிட்டு
வரும் பொழுது சற்று தொலைவில் கூட்டமாக
மக்கள் பேசுவதை கவனித்து அங்கே சென்றனர்

"ஒரு நாளாவது இன்னும் திருடனை கண்டு பிடிக்க முடியலை! இந் நேரம் அவன் வேற நாட்டுக்குக் போயிருப்பானுங்க. இன்னொருவன் ஏங்க இவ்வளவு விலை உயர்ந்த நகைகளை இப்படியா வைப்பாய்ங்க! அதில்லீங்க அரண்மனையில் வேலை பாக்குறவங்க நம்பிக்கைக்கு பாத்திரமா தானே இருப்பாங்க. இன்னும் கண்டு பிடிக்க முடியலேங்கறது ஆச்சரியமா இருக்கு

ஆதிரை அரண்மனையிலிருந்து யாரோ ஒரு திருடன் நகைகளை திருடிச் சென்றிருக்கிறான் சேவகர்கள் நாலா பக்கமும் தேடி வருகிறார்கள் எந்த துப்பும் கிடைக்கவில்லை. சற்று யோசித்து ராஜகுமாரனிடம். எனக்கு இதில் ஏதோ ஒரு மர்மம் இருப்பதாகவே நினைக்கிறேன் நேரம் வரும்

கட்டிக் கொண்டு வந்த உணவை சாப்பிட்டுவிட்டு இளைப்பாறினார்கள் ஆதிரை! மர்மம் ஏதோ இருப்பதாக சொன்னீர்களே! அதைப்பற்றி கொஞ்சம் விபரமாக சொல்லுங்களேன். என் தந்தையார் யாரையும் அவ்வளவு சுலபமாக நம்பிவிட மாட்டார். இவன் எப்படி சம்மதிக்க வைத்தான். தந்தையார் ஒப்புதலும் அளித்து விட்டார். நினைத்தது இது தான். பதில் விரைவில் எனக்கு தெரிய வரும் ஆதிரை நம்புங்கள். நம்பிக்கை வீண் போகாது மறுநாள் வேறு இடம் சென்று வந்தார்கள். துப்பு ஒன்றும் கிடைக்கவில்லை.

இன்று நாம் வேறு ஒரு திசையில் போய் முயற்சி செய்வோம். உங்களுக்கு ஏதாவது வேறு வழி தோன்றினால் சொல்லுங்கள். உங்களுக்கு தெரியாததையா நான் சொல்லப் போகிறேன். ஆரம்பத்திலேயே அறிவித்துவிட்டீர். பல ஊர்களுக்கு செல்பவன் என்று! வாருங்கள் புறப்படுவோம். போகும் இடத்தில் நிச்சயம் ஏதாவது துப்பு கிடைக்கும். கிடைத்தால் நான் அதிர்ஷ்ட சாலி. உங்கள் வாக்கு மெய்யாகும். அங்கு நோக்கி இருவரும் சாதாரண ப்ரஜைகள் போல ராஜசபைக்கே சென்று அமர்ந்து கொண்டார்கள்.

சிறிது நேரத்தில். மந்திரியார். இன்று சேனாதிபதி! மார்த்தாண்டம் அவர்களே உங்களை மீறி இது எப்படி சாத்தியமானது? ஒன்றும் புரியவில்லை? மகாராணியார் நகைகளை நகைப் பெட்டியில் தான் பத்திரமாக வைத்தார்களா? இல்லை யாரும் கண்பட அங்கேயே வைத்திருந்தார்களா? தெரியவில்லை மந்திரியாரே! மேலும் எப்பவும் இருக்கும் பணிப் பெண்கள் தானே இருக்கமுடியும். ஆமாம் அதே காட்சி! சேனாதிபதியாரே! இருந்தாலும் பலர் பார்க்கும் படி விலை உயர்ந்த நகைகள் கிடந்தால் யாருக்கும் ஒரு சபலம் வரும்தானே! என்ன நான் சொல்வது சரியாக இருக்கிறதா? மனித சுபாவம் எப்படியும் மாறும்.

நீங்கள் சொன்ன விபரம் 100க்கு 100
நடக்க கூடியது. எல்லா திசைகளிலும்
நம் வீரர்கள் சென்று இருக்கிறார்கள்
வெற்றியோடு வருவார்கள் நம்புங்கள்.
நல்லது! நல்லதே நடக்கும் நம்புவோம்.
இருவரும் அங்கிருந்து புறப்பட்டு ஒரு மரத்தின்
நிழலில் இளைப்பாறினார்கள். திடீரென்று
அம்சுமான் "ஆதிரை விரைவில் நீங்கள்தான்
மகாராணி! என்ன ஆயிற்று உங்களுக்கு
நடக்கும் போதே கனவா? சிந்தித்துக்கொண்டீர்கள்
ஆதிரை ஒரே நாளில் இரண்டு
சமஸ்தானங்களில் ஒரே மாதிரியான திருட்டு.
விலைமதிக்கமுடியாத ஆபரணங்கள் மட்டுமே
திருடப்பட்டிருக்கிறது. "ஆமாம் அதற்கென்ன
நான் மகாராணி ஆவதற்கும் இதற்கும் என்ன
தொடர்பு? இன்னுமா உங்களுக்கு புரியவில்லை.
சரி சரி இங்கிருந்து நேராக புதுக்கோட்டை
செல்கிறோம். என்னை யாராவது கண்டுபிடித்து
விட்டால்? வேண்டாம் இந்த விஷப் பரிட்சை.
பாடுபட்டது அத்தனையும் வீணாகும். ஐயோ!
ஆதிரை நல்லபடியாக நடக்கும். நம்புங்கள்
நீங்கள் ராணியாகப்போவது நிச்சயமாகிவிட்டது
புதுக்கோட்டையில் பல இடங்களுக்கு சென்று
பார்த்தார்கள். எங்கும் ஒரே மாதிரியான பேச்சு
அங்கே ஒருவர் "ஏங்க பெத்த பொண்ணு ஏதோ
காரணத்தால வெளியே வந்துடுச்சு. எவனோ

ஒருத்தி விலை உயர்ந்த நகைகளை அணிந்து நான் தான் உங்கள் மகள் என்றால் ராஜா நம்புவாரா? என்னங்க காதுல பூ சுத்த றாங்க! ஏதோ நடந்திருக்கு? அங்க உள்ள பொண்ணுங்களை வந்திருக்கிறவங்களை பார்த்தா ஏதோ கொள்ளைக் கூட்டம் மாதிரி தெரியுது. அண்ணே! அண்ணன் சொல்றது எங்களுக்கும் சரியா படுது. பெரியவரை கொலை பண்ணிடுவேன் அப்படி இப்படின்னு மிரட்டி வைச்சிருப்பானுங்களோ? உடக்கூடாது மக்களாகிய நாமும் ஏதாச்சும் செய்யணும் இதை அனுமதிக்கக் கூடாது அண்ணே. ஆதிரா அதிர்ச்சி அடைகிறாள். இப்பொழுது புரிகிறதா மகாராணி! நன்றாக புரிந்தது. நகைகளை காட்டி தந்தையாரை மிரட்டி அரண்மனைக் குள் புகுந்து விட்டாள்.

நாம் எவ்வளவு விரைவாக நகரத்தை விட்டு செல்கிறோமோ அது இருவருக்கும் நல்லது. சொல்வதை கவனமாக கேளுங்கள் எங்கும் போகாதீர்கள். யாருடனும் பேசாதீர்கள். அப்படி ஒரு சந்தர்ப்பம் வாய்த்தால் செவிடு, ஊமை போல நடியுங்கள். இது வேறயா "நடிக்கிறேன்" என்று விரக்திச் சிரிப்பு சிரிக்கிறாள். ஒரு நொடியில் திரும்பி விடுவேன் தெய்வம் நமக்கு துணை நிற்கும். ஆதிராவை தனியாக விட்டு சித்திரசேனன் அரண்மனைக்குள்

ஆதிரையான் தந்தையாரை சந்திக்க
செல்கிறான். அரண்மனையால் தெரிந்த 2, 3 முக்கியமானவர்கள்
சித்திர சேனனுக்கு தெரியும். ஆண்டவா
யாராவது ஒருவரை பார்க்க அருள் செய்ய
மாட்டாயா? அப்படியே!! தெரிந்த ஒருவர் எதிரே
வந்தார். அரண்மனையில் மிக முக்கியமானவர்.
விபரங்களை எடுத்துரைத்தான். அவர் நேராக
மகாராஜாவிடம் சென்று அவர் அனுமதி பெற்று
அரசரிடம் அழைத்து சென்றார். அரசரிடம்
அறிமுகம் செய்ய அரசே நான் கோவூர் அரசரின்
மகன் பெயர் சித்திரசேனன். ஆமாம் ஆமாம் நான்
உங்களை அரசருடன் பார்த்திருக்கிறேன். எல்லா
விபரங்களையும் தெரிவித்தவுடன். மகாராஜா! நான்
உங்களுக்கு புத்திமதி சொல்வதாக கருதாதீர்கள்.
கவலையை விட்டு ஒழியுங்கள். எதற்கும் சம்மதம்
கொடுக்க வேண்டாம். இரண்டு மூன்று நாட்களில்
நீங்கள் வணங்கும் ப்ரகதாம்பிகை எல்லா
பிரச்சனைகளையும் தீர்த்து வைப்பாள். நம்புங்கள்
நல்ல செய்தியுடன் வருவேன்.

காத்துக் கொண்டிருக்கும் ஆதிரையுடன்
அவர்கள் அரண்மனை அடைந்தார்கள். ஆதிரை
நமக்கு வெற்றி. இரண்டே நாட்கள் தான் பாரு
நீங்கள் மகாராணி. "என்னவாயிற்று உங்களுக்கு
கற்பனையை விட்டு வெளியே வாருங்கள்". முதலில்
சொல்வதை கவனமாக கேளுங்கள். தந்தை
யாரை பார்த்தேன். என்ன தந்தையாரை பார்த்து

பேசினீர்களா! செய்த காரியத்திற்காக ரொம்ப வருத்தப்பட்டார். ஆதிரை பத்திரமாக இருக்கிறாளா? என பலமுறை கேட்டார். இது தான் நமது திட்டம்.

நாளை நகைகளை பறிகொடுத்த அந்த இரண்டு மகாராணிகளையும் பார்க்கிறோம். தக்க துணையுடன் மாறுவேடத்தில் புதுக்கோட்டை வர ஏற்பாடு. துணையாக வருபவர்கள் அங்கே முக்கிய பொறுப்பில் உள்ளவர்கள். ஆதிரா கவனி? இரண்டு இடத்தில் திருடிய இருவரும் உடன்பிறந்த சகோதரிகள். இவர்கள் பின்னே கொலைகார கூட்டம். காசுக்காகவே கூடவே இருக்கிறார்கள். "தங்களை தவறுதலாக புரிந்து கொண்டேன். முதல் நம்பிக்கை இல்லை. என்னை மன்னித்து விடுங்கள்." ஆதிரா பெரிய பெரிய வார்த்தைகளை சொல்லாதீர்கள். என் லட்சியம் நீங்கள் புதுக்கோட்டை மகாராணி ஆக வேண்டும். சரியா! காரியத்தை கச்சிதமாக முடிப்போம்.

ஆதிரா! அதோ இரண்டு மகாராணிகளும் வந்து விட்டார்கள். மறைவாகவே இருவர்கள் பெண்கள் நடமாட்டம் இருக்கும் இடத்தை அவர்களுக்கு காண்பியுங்கள். திருடிகள் அங்கே கட்டாயம் இருப்பார்கள். சாதாரணமாக போவது போல், தூரத்திலேயே நின்று இவர்கள் தான் என்று கண் ஜாடை செய்தால் போதும் ஜாக்கிரதை. கச்சிதமாக முடியுங்கள்

காத்திருக்கிறேன். வெற்றி நடந்தே. அருகில் வர வேண்டாம். சைகை மூலம் தெரிவியுங்கள். சற்று நேரத்தில் ஆதிரா வெற்றி செய்தியை சைகை மூலம் தெரிவிக்க அரசகுமாரன் முகத்தில் வெற்றி புன்னகை.

உடனே மந்திரியாரைப் பார்த்து எடுக்கப் போகும் நடவடிக்கைகளை விளக்கினான். வெற்றி நடந்தே என்று தட்டிக் கொடுத்து.. அரசரிடம் அனுமதி பெற்று சேனாதிபதியிடம் "அந்த கொள்ளைக் கூட்டம் ஓடிவிடாதபடி பாதுகாவலை பலப்படுத்த சொன்னார். ஊர் மக்களுக்கு இன்று அவசரக் கூட்டம் சபையில் கூடும் என தண்டோரா போட்டு அறிவிக்கச் சொன்னார்.

அரசர் "ஊர் மக்களிடம். இந்த அவசர அழைப்பு எனக்கு ஏற்பட்ட அவப்பெயரை அகற்றவே உங்கள் ஆதரவை நாடுகிறேன். மக்கள் உண்மை வர வேண்டும். தர்மம் வெல்ல வேண்டும் என்றார்கள் மகாஜனங்களே. இதோ இங்கே திருட்டுப் போன அண்டை நாட்டு மகாராணிகளின் நகைகள், அவர்கள் நம் அரண்மனையில் தங்கியுள்ளார்கள். தக்க பாதுகாப்பு உடன் அழைத்து வரப்பட்டு நகைகளை அடையாளம் காட்டுவார்கள். அமைதி காக்கவும், மகாராணிகள் இருவரும் இது தங்கள் நகைகள் தான். இந்த இருவரும் இங்கே வந்து அரசரை ஏமாற்றி அரண்மனையில் ரகசியமாக பதுங்கி இருக்கிறார்கள்.

இருவரையும் சங்கிலியால் பிணைத்து சபை நடுவே நிறுத்தினார் சேனாதிபதி.

அந்த திருட்டுக் கூட்டம் தப்ப ஓட முயற்சி செய்ய, கூடவே சாதாரண மனிதர்களாக உட்கார்ந்திருந்த காவலாளிகள் ஒட்டு மொத்தக் கூட்டத்தையும் சிறைபடுவே நிறுத்தினார்கள்.

அரசர் எழுந்து நின்று "ஊர் மக்களே ஆபரணங்களுக்கு ஆசைப்பட்டு அயபுத்தியையும் என் மகளையும் இழந்தேன். அதே மகள் என்னையும் இந்த மக்களையும் காப்பாற்றிவிட்டாள். அரசர் ஆதிரையை அணைத்துக் கொண்டார். இதோ இவர்தான் பக்கத்து சமஸ்தானத்தின் அரசர் மகேந்திர பூபதியின் மகன் சித்திர சேனன். பட்டத்து இளவரசன். இவர்தான் மகளையும் காப்பாற்றி, என் அரச கௌரவத்தையும் காப்பாற்றி உங்களையும் காப்பாற்றிய இளைஞர். மக்கள் பெருத்த ஆரவாரம் செய்தனர்.

தர்மம் வெல்லும். வாழ்க பாரதம்.